1990 ஆகஸ்டு 22]

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்திலே கைத்தறி சங்கங்களிலே பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு மோசடி செய்யப்பட்டு, அதைப் பற்றி ஆய்வு செய்ய தனிக் குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணை அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு **திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அருப்புக்கோட்டையில் கடந்த காலத்தில் நடைபெற்ற அந்தத் தவறுகளுக்காக 15 பேர்கள் சிறைத் தண் டனை வரையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காக தனி யாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பல்வேறு சங்கங் களில் கடந்த காலத்தில் நடந்த தவறுகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. முழுமையான அறிக்கை வந்த பிறகு அதைப் பற்றி இங்கே விவரங்களைத் தருகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களிலே உள்ள உறுப்பினர் களுக்கும், அதைப்போல கைத்தறி நெசவு வேலையில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று உத்தரவிட்டும், அந்தக் கூலி பல இடங்களில் அமலாகவில்லை என்பது அமைச்ச ரவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் பெரிய அதிகாரிகளே, இதை அமல் படுத்தினால் அந்தச் சங்கங்களை முறையாக நடத்த முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்று காரணம் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களைச் சொல்லி, அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதைத் தடுப்பது சரியல்ல. அதை நிறைவேற்ற அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு **திரு. ச. தங்கவேலு:** தலைவரவர்களே, உறுப் பினர் அவர்கள் சொன்ன கருத்தும் விரைவில் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் கடனுதவி

*3555—**திரு. பி. வி. இராஜேந்திரன் :**
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்கள் கட்ட பேரூராட்சிகளுக்கும், நகராட்சி களுக்கும் கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : I. U. D. P. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம்/திருமண மண்டபம் கட்ட ''இராணிப்பேட்டை'' மற்றும் ''உடுமலைப்பேட்டை'' ஆகிய இரு நகராட்சிகளுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தனியார் முதலீடு இது போன்ற திட்டங்களுக்கு அதிகம் இருக்கும் நிலையில் அரசு நிதியையும் இதில் செலவிடத் தேவையில்லை என்று கருதப்படுவதால் மற்ற நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இவ்வாறான கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

மாணவர் விடுதி கட்டுதல்

*1005: திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தில் மெலட்டூர் பேரூராட்சியில் மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மெலட்டூர் பேரூராட்சியில் இயங்கிவரும் மாணவர் விடுதி சிறிய வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கு சுமார் 80 மாணவர்கள் தங்கி, கல்வி பயில்கிறார்கள். அந்தக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது, முறையாக தண்ணீர் வசதி கூடக் கிடையாது. கடந்த ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி நான் அதைப் பார்வையிட்டபோது, மாணவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்தனர். எனவே அரசுக்குச் சொந்தமான மாணவர் விடுதி ஒன்று இந்த ஆண்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

10-00 மணி

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS